Registered No. M. 8880 "SIDDHANTHAM"
Vol. 43 — No. 6

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 43 | சாதாரண ஆனி 1970 ஜூன் | இதழ் 6

உள்ளுறை பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 28–6–70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, ஆண்டு விழா முதலியன பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர். (செயலாளர்)

"ருக்மணி ருக்கர்" திருவாளர். அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் சார்பில் 23–5–70 சனிக்கிழமை மாலை சென்னை கபாலீச்சரத்தில் திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் "திருஞான சம்பந்தர்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தேவார ஆசிரியர் திரு. முருகேச முதலியார் அவர்கள் சம்பந்தர் தேவாரத்தை இடை இடையே ஓதினார்கள்.

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் சமயக் கட்டளைகளின் சார்பில் 5-6-70 மாலை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் சமாஜத் தலைவர் திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ. அவர்கள் "பாம்பனடிகள்" பற்றிப் பேசினார்கள். 12-6-70 மாலை கபாலீச்சரத்தில் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" பற்றிப் பேசினார்கள்.

சமாஜத்தின் சார்பில் 8–6–70 மாலை கபாலீச்சுரத்தில் திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம். ஏ. அவர்கள் சேக்கிழார் பற்றிப் பேசினார்கள்.

ஆனித்திங்கள் சிறப்பு நாள்கள்

13 (27-6-70)–இரேவதி—கலிக்கம்பர்கோன் கலிக்காம நாயனார் விழா

23 (7–7–70)–மகம்—மாணிக்கவாசக சுவாமிகள் விழா

25 (9–7–70)–பூரம்—அமர்நீதி நாயனார் விழா.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43	சாதாரண ஞு ஆனி ஜூன் 1970	இதழ் 6

திருமுறைப் பகுதி

இறைவன் திருவோலக்கத்தில் அப்பர்

ஆசிரியர்

திருப்பள்ளி எழுச்சியின் கருத்து, இறைவனை அதி காலையில் துயில் எழுப்பி, ''இன்றுயாம் செய்யவேண்டிய பணி தெரியவில்லை; எமக்கு என்ன கட்டளை? அது கேட்பதற்காகவே வந்தோம்'' என்று மாணிக்க வாசகர் சொல்லுகின்றார் என்பதைப் பலமுறை விளக்கி யிருக்கிறோம். ''என்னை நீ ஏற்றுக்கொண்டாய், இனி கை விட்டால் அது உனக்குத்தான் குறைவு'' என்று அவர் இறைவனிடத்தில் முறையிடுவதைப் பல இடங்களில் காண்கிறோம். இக்கருத்து, இவர்மட்டும் சொல்வதன்று. அப்பர் சுவாமிகளும் பல இடங்களில் இதுபோன்ற கருத்துக்களைச் சொல்லுகின்றார். திரு ஏகம்பத் திரு விருத்தத்தைப் பார்த்தால் இது நன்கு விளங்கும். ஒரு பாடலை மட்டும் இங்குத் தெளிவு படுத்த எண்ணுகிறோம்.

அப்பர் சுவாமிகள் தம்மை எப்போதும் மிகவும் தாழ் வான நிலையில் வைத்தே பேசுவார். புழுவினும் கடையேன் என்று தம்மைச் சொன்னவர் அல்லரோ? ஆகவே, இறைவன் சந்நிதியில் தயங்கியே செல்லுகின்றார். அங்கு,

வாயிலில் ஒரே கூட்டம். வைணவமரபில் 'சொர்க்கவாசல் திறக்கிறது' என்று வைகுண்ட ஏகாதசி அன்று வைணவ அடியார் சொல்வதையும் அங்குள்ள கூட்டங்களையும் நினைவு கூர்ந்தால், அப்பர் சுவாமியின் நயக்கம் நன்கு விளங்கும். இவர் சென்றபோது சந்நிதியில் நெருக்கி இடித்துத் தள்ளிக் கொண்டு இருக்கிற வானவர்கள் பெரும் கூட்டமாக அலைமோதுகிறார்கள். இவர்களை வரிசைப் படுத்துவதற்காகச் சந்நிதியில் உள்ள வாயில் காவலர் இவர்களைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு பரபரத்து நிற்கிறார்கள். சிவபெருமானுடைய திருவோலக் கத்தைத் தரிசிப்பதற்காக, அயனும் திருமாலும் வந்து நிற்கிறார்கள். கூட்டத்தில் உள் புகுவது அவர்களுக்குக் கூட எளிதான காரியமில்லை.

ஆனால் திருமாலும் பிரமனும் வந்த நோக்கம் தரிசனம் மாத்திரம் அன்று. இறைவனுடைய திருவுள்ளம் என்ன என்று அறிவதே அவர்கள் நோக்கம். ஆண்டவன் அன்றாடம் படி அளக்கிறான் என்று பேச்சு வழக்கிலே சாமானிய மக்கள் சொல்வார்கள். உலக விவகாரத்தில் அவரவருக்குத் தக்கபடி இறைவன் படி அளக்கிறான் என்பது உண்மை. ஆனால் திருமாலுக்கும் அயனுக்கும் இப் படி வேண்டுவதில்லை. எனினும், அவர்களுக்கும் இறைவனுடைய கட்டளை உண்டு. சித்தாந்த சமயத்தில் சிவபெருமான் இவ்விரு தேவர்களையும் அதிட்டித்து நின்று உலகை நடத்துகின்றான் என்று சொல்வார்கள். காலையில் இவ்விரு தேவர்களும் பெருமானை வந்து தரிசிக்கிறார்கள். தாங்கள் அன்று செய்யவேண்டிய பணி என்ன வென்று அறியவே அவர்கள் தரிசிக்கிறார்கள். பெருமானும் அவர் களுக்குப் பணியை உணர்த்திய பின்னர், அவர்கள் விடை பெற்றுச் செல்லுகிறார்கள். இக் கருத்தை அப்பர் தெளிவாக ஒருபாடலில் கூறுகிறார்.

இங்கே நாம் மூன்று வகையினரைப் பார்க்கிறோம். முதலாவது, வருகின்ற கூட்டத்தைப் பிடித்துத் தள்ளி அமர்த்து ஒழுங்கு படுத்துகின்ற வாயில் காவலர்கள, இரண்டாவது, பெருந்திரளாகத் தரிசனத்துக்கு வந்து

ஒருவர்மேல் ஒருவர் விழுகின்ற வானவர் கூட்டம், மூன்று வது, இந்தக் கூட்டத்தின் நடுவே புக முடியாமல் தவித்துக் கொண்டு நிற்கிற பெரும் பதவியுடையோராகிய பிரமனும் திருமாலும். இந்தச் சூழ்நிலையின, அப்பர் சுவாமிகளும் வந்து நான்காவதாக நிற்கிறார். எப்படி ஆண்டவனைத் தரிசிப்பது என்பது அவரது தயக்கம்.

நம் ஆசாரியர்களுடைய பாடல்கள் எல்லாம் பக்திப் பாடல்கள் ஆயினும், அவற்றுள் காணப்படும் உணர்ச்சி வேகமானது ஒன்றில் இருப்பதுபோல் மற்றொன்றில் இராது. சில சமயம் கருணை, சில சமயம் வீரம், சில சமயம் சாந்தம், இகழ்ச்சி, நகைச்சுவை போன்றனவாக, பாடல்தோறும் பாவங்கள் வேறுபட்டு நிற்கும். இப்போது நாம் குறிப்பிடுகின்ற பாடலைப் பக்தியோடு நகைச்சுவையும் தோன்றப் பார்க்கவேண்டும்.

உந்தி நின்றார், உன்றன் ஓலக்கச் சூளைகள், வாய்தல் பற்றி;
துன்றி நின்றார், தொல்லை வானவர் ஈட்டம்; பணி அறிவான்
வந்து நின்றார், அயனும் திருமாலும்; மதிற்கச்சியாய்!
இந்த நின்றேம்; இனி எங்ஙனமோ வந்து இறைஞ்சுவதே.

[உந்தி-தள்ளிக்கொண்டு. ஓலக்கம்-சபையில் வீற்றிருத்தல், சூளைகள்-காவலாளர், வாய்தல்-வாயில், துன்றி-நெருங்கி. ஈட்டம்-கூட்டம், மதில் கச்சியாய்-மதில் சூழ்ந்த காஞ்சி நகரத்தில் உள்ள ஏகாம்பர நாதனே, இந்த-இதோ, எங்ஙனமோ-எப்படி.]

அப்பர் சுவாமிகள் 'இதோ நிற்கிறேன்' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறார். "பெருமானே நான் இதோ நிற்கிறேன். எப்படித்தான் உன் சந்நிதியில் நெருங்கி வந்து பணியப் போகின்றேனோ" என்று இரக்கத்துடன் கூறுகின்றார் என்பது பாட்டின் பாவம்.

உலக வாழ்க்கையில் இத்தகைய நிகழ்ச்சிகளை நன்கு பார்க்கலாம். ஒருவர் தலைவர் மிகவும் நமக்கு வேண்டியவராய் இருந்தாலும் அவரைப் பார்க்கப் பெரும் கூட்டம் திரண்டு நிற்கும்போது நாம் முண்டிக்கொண்டு முன்னே போக முடிவதில்லை. கல்யாண வீட்டு விருந்திலும் இப்

படித்தான். இவற்றை எல்லாம் பார்த்த அனுபவத்தோடு இந்தப் பாடலைப் பார்க்க வேண்டும்.

சூளைகள் இந்த சொல்லின் பொருள் விளங்கவில்லை. தருமபுரம் பதிப்பில் "சூலைகள்-வேசிகள், அரம்பையர், நடனம் புரிந்து எனலுமாம்" என்று உள்ளது. இது பொருத்தமாகத் தெரியவில்லை. சூளை என்றால் வேசி என்ற பொருளில் கந்த புராணத்தில் காட்டப் பட்டுள்ள ஒரு மேற்கோளை வைத்து, இவ்வாறு இப்பதிப்புக் கூறுகின்றது போலும். பொறிபுலன்கள் ஒடுக்கமாய் உள்ள நிலையில் தணிகை மணி செங்கல்வராய பிள்ளை அவர்களை இச் சொல்பற்றி யாம் கேட்டபோது, அவர்கள் தமது தேவாரப் புத்தகத்தை எடுத்து அதில் எழுதியிருந்த குறிப்பைக் காட்டினார்கள். அங்கு 'காவலாளர்' என்பதே அவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பு. இதுவே உண்மையும் திருத்தமும் உடைய பொருளாகும். இல்லையானால், வேசியர் நடனம் பார்ப்பதற்காக வானவர் வந்து நின்றார் என்பது பொருளாகிவிடும். மேலும் இத்திருவோலக்கம் உலாவன்று வீற்றிருக்குமிலை; நின்றார் என்பதனால் இது பெறப்படுகிறது. வீற்றிருக்குமிடத்தில் வேசியருக்கு வேலையில்லை. தேவதாசியர் என்று சொன்னாலாவது சோடசோபசாரங்களில் ஒன்றான நிருத்தம் நடைபெறுகிறது என்று ஒருகால் கருதலாம். அது பொருளன்று. மேலும், நாயன்மார் பாடிய அருள் பாசுரங்களுக்குச் சில சமயம் சந்தர்ப்பம் நோக்கிப் பொருள்காண வேண்டுமேயன்றி, அகராதியை மட்டும் புரட்டிப்பார்த்துப் பொருள் சொல்ல முற்படுவது பொருந்தாமலிருக்கும். இவ்விடத்தில் காவலாளர் என்பதே செப்பம் மிக்க பொருள். இப் பொருள் அகராதியில் தோன்றவில்லை, பிள்ளையவர்களுடைய பக்தியில் தோன்றிற்று என்று கொள்ள வேண்டும். இந்தப் பதிகம் முழுமையிலும், திருவாசகத்திலும் குறித்த பொருளே யாம் இங்குக் கூறிய பொருள். பகதிச் சுவையோடு சற்று நகைச் சுவையும் கலந்து இப் பாடலைப் பார்த்தால் அப்பர் கண்ட திருவோலக்கக் காட்சியை நாமும் காணமுடியும்.

திருவிசைப்பாத் தலங்கள்

(மு. அ.)

திருவிசைப்பா திருப்பல்லாண்டு-ஒன்பதாம் திருமுறை என்பதாகும். கிடைக்கிற பாடல்கள் 301, திருப்பல்லாண்டு 13 பாடல் நீக்க, திருவிசைப்பா பாடல்கள் 288 இவை இருபத்தெட்டுப் பதிகங்கள், இவற்றைப் பாடினோர் திருமாளிகைத்தேவர் முதல் சேதிராயர் ஈறாக ஒன்பது பேர். இவ் ஒன்பது பேருள் சிதம்பரமாகிய கோயிலை மட்டும் பாடினோர் திருமாளிகைத்தேவர், கண்டராதித்தர், வேணாட்டு அடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய அறுவர். ஏனைய மூவருள் சேந்தனார் கோயிலுக்குப் பல்லாண்டு பாடினாரே அன்றித் திருவிசைப்பாப் பாடவில்லை; இவர் திருவிசைப்பாப்பாடிய தலங்கள் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்ற மூன்று. மற்ற இருவர் கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி என்போர். இந் நம்பி, கோயிலுக்கு ஒரு பதிகமும் திருவாரூருக்கு ஒரு பதிகமும் பாடியுள்ளார் கருவூர்த்தேவர் கோயிலுக்கு ஒரு பதிகமும், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சரம், திருப்பூவணம். திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருதூர் ஆகிய தலங்களுக்கு ஒவ்வொரு பதிகமும் பாடியுள்ளார்.

இவ்வாறு கிடைத்துள்ள பதிகங்களில் கோயிலுக்கு உரியவை பதினைந்து; ஏனையவை பதின்மூன்று இவை பதின்மூன்று தலங்களுக்கு உரியன கருவூர்த்தேவர் மட்டும், கோயில் அன்றி, ஒன்பது தலங்கள் பாடியிருக்கிறார் என்பது இங்கு அறியத்தக்கது. இவ்வொன்பதுள், பூவணம், இடைமருது தவிர மற்ற ஏழும் பிறர் யாரும் அறிந்திலர்.

இனி, இப்பதின்மூன்றில் நன்கு பிரசித்தமாகத் தெரிந்த தலங்கள்—திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருபூவணம், தஞ்சை இராசராசேச்சரம், திருவிடை

மருதூர் ஆகியவை. ஓரளவு தெரிந்தவை திருவிடைக்கழி, கங்கைகொண்ட சோளேச்சரம் என்பன. பொதுவாக, சைவ மக்களுக்குச் சிறிதளவும் விளக்கம் தெரியாத தலங்கள்–திருக்களந்தை ஆதித்தேச்சரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், திருச்சாட்டியக்குடி என்ற ஐந்து. இத்தலங்களைப் பற்றிய வரலாறுகளை இனித் தொடர்ந்து சொல்லுவோம்.

சொல்லுமுன், இரண்டொரு குறிப்புகள் நினைவு கூறத்தக்கன. இவ்வாசிரியர் அனைவரும் பத்தாம் நூற்றாண்டிலும், பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர்கள். இவர்களுள், கண்டராதித்தர் சோழச்சக்கரவர்த்தியாக 950–57 இல் ஆட்சி புரிந்தவர்.

குறிப்பிட்ட தலங்களில் ஆறு தலங்களில் தேவாரப் பதிகங்கள் பெற்றவை. தஞ்சை இராசராசேச்சரமும், கங்கைகொண்ட சோளேச்சரமும் சோழர் தலைநகராக இருந்தவை. திருவிடைக்கழி ஒன்று மட்டும் முருகனுக்குரிய திருவிசைப்பா கொண்டது.

இந்தத் திருமுறையில் வரும் பதினான்கு தலங்களில் திருப்பூவணம் ஒன்றே சோழநாட்டு எல்லைக்கு வெளியே உள்ள தலம். இது பாண்டி நாட்டுக்குரியது. பாண்டி பதினான்கில் ஒன்று. ஏனைய யாவும் சோழநாட்டுத் தலங்கள். சோழர் ஆதிக்கம் ஓங்கியிருந்த காலத்தில் இப்பதிகங்கள் எழுந்தன என்பது அறியத்தக்கது.

திருவிசைப்பாவில் பிற திருமுறைகளில் காணப்படாத சொற்களும் சொல்லாட்சிகளும் தொடர்களும், கருத்துக்களும் காணப்படுகின்றன. அதிலும், கருவூர்த் தேவரிடம் இவை மிக அதிகம்; இவர் சொந்த ஊர் சோழநாடு அல்லாது கருவூராய் இருந்தமை ஒரு காரணம் ஆகலாம்.

1. திருக்களந்தை ஆதித் தேச்சுரம்

கருவூர்த் தேவருடைய முதல் பதிகம் கோயில்; இரண்டாவது பதிகம் திருக்களந்தை ஆதித்தேச்சுரத்துக்குரியது;

இது 10 பாடல், பாடல்தோறும் களந்தை ஆதித்தேச்சுரம் என்றே இவர் பாடியிருப்பினும், சோழர் வரலாறு ஆங்கிலத்தில் எழுதிய நீலகண்ட சாஸ்திரியும், தமிழில் எழுதிய சதாசிவ பண்டாரத்தாரும் இதைப்பற்றி ஒரு வார்த்தையும் தெரிவிக்கவில்லை; காரணம் விளங்கவில்லை. மன்னார்குடி தாலுக்காவில் கோவில் களப்பாழ் என்று வழங்கும் ஊரே திருக்களந்தை ஆதித்தேச்சுரம் என்ற திருவிசைப்பாத் தலமென்று அறிகிறோம். காவிரியின் இருமருங்கும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்த சிவபக்தன் ஆதித்த சோழன் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன. ஆதலால் இவ் ஆதித்தேச்சுரம் இம்மன்னன் கட்டியதென்று கருதுவது ஏற்புடையதே.

இடம்: தஞ்சை ஜில்லா மன்னார்குடி திருத்தருப்பூண்டி பஸ் சாலையின் 10 ஆவது மைலில் உள்ள திருப்பத்தூர் என்ற ஊரில் உள்ள சிற்றாற்றின் பாலம் கடந்து இரண்டு மைல் சென்றால் திருக்களர் அடையலாம். அங்கிருந்து தனியான சாலை திருக்களந்தைக்குப் போகிறது. கப்பிச்சாலை; பஸ்ஸும் செல்கிறது; 4 மைல் தூரம்.

பெயர்: களப்பாள் என்ற பெயருடைய ஊர்கள் பல இருப்பதால் இதனைக் கோயில் களப்பாள் என்று சொல்லுகிறார்கள். களப்பாள்-களந்தை, களப்பாழ் என்று இருந்திருக்கலாம் போர்க்களம் ஆகியிருந்து அதனால் ஊர் பாழ்பட்டிருந்து இப்பெயர் வந்ததா என்பது விளங்கவில்லை. ஆனால் அது பழஞ் செய்தி. இன்று ஊர் நல்ல நிலைமையில் இருக்கிறது. மேவாளா முதலியார் மரபினர் வசதி மிக்கவர்கள் வாழுகிறார்கள். சுவாமி பெயர் ஆதித்தேசுவரர், அழகிய நாதர்; அம்பிகை பிரபா நாயகி; பண்ணினேர் மொழியாள்; தல விருட்சம் வில்வம்.

கோயில்: கிழக்கு நோக்கியது மூன்று புறம் அகழி சூழ்ந்தது சிறு கற்கோயில்: புதிய திருப்பணி. கற்கள் பெயர்க்கப்பட்டமையால், கல்வெட்டுக்கள் காணப்படவில்லை. கோயில் மிகவும் துப்புரவாக உள்ளது. கருவறையின் மீதுள்ள விமானம், தஞ்சை, கங்கைகொண்ட

சோழபுரம், திரிபுவனம், தாராசுரம் போன்ற அமைப்புடையது; பெரியது. இதுவே இது பழைய சோழர் கோயில் என்பதைக் காட்டும். சுவாமி அம்பிகை இருவர் சந்நிதியுமாகிய பெரிய மண்டபத்தில் எல்லா மூர்த்திகளும், கற்சிலை, உற்சவர், ஒருசேர வைக்கப்பட்டுள்ளனர்.

மூர்த்தி : சுவாமி திருவுருவம் சிறியது; அம்பிகை நடுத்தர வடிவம்; துவார பாலகர் துவார பாலகியர் புதியவர் நன்முறையில் பெரிதாகக் கற்பூரத்தைல வர்ணம் பூசி வைக்கப்பட்டுள்ளனர். சம்பந்தர் மாணிக்கவாசகர் ஆதித்தச்சோழர் சிலைகள் கூற்றுவ நாயனார் சிலை உற்சவரைப் பார்த்துச் செய்து வைக்கப்பட்டுள்ளன. கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, உற்சவ மூர்த்தி, நடராசர் மிகப் பெரிய திருவுருவம் மிகவும் கம்பீரமான தோற்றம். இவ்வடிவின் பொலிவையும், வேலைப்பாட்டையும் கொண்டே இக்கோயில் மிக்க பழமையுடையதென்று உணரலாம். அம்பிகையும் பெரிய திருவுரு. அருகில் மாணிக்க வாசகர், சிறிய வடிவம். தேவியரோடு முருகன் சிறிய வடிவம். திரிபுர சம்ஹார மூர்த்தி சிறப்பானவர். கூற்றுவ நாயனார் உற்சவர் பழைய சிலை. கூத்தாடும் சம்பந்தர் பழைய வடிவம் பிரகாசமானது. பரவையோடு கூடிய சுந்தரர், சோமாஸ்கந்த மூர்த்தி.

அருகில் ஒரு பர்லாங் தூரத்திலிருந்த கைலாய நாதர் கோயில் என்பது இலமானபடியால் அங்கிருந்த நடராசரும், அம்பிகையும் இங்கு கொணர்ந்து வைக்கப்பட்டுள்ளனர். இவரும் சிறப்பான அழகிய வடிவினரே.

வரலாறு : ஆதித்த சோழன் கட்டியதுபோலும், களந்தை முதல்வனுர் என்று சொல்லும் நாயனுரான கூற்றுவ நாயனுர் வாழ்ந்த தலம். இவருக்குத் தில்லைவாழ் அந்தணர் முடிசூட்ட மறுத்துவிட இவர் சிவபிரான் திருவடியை முடியாகக் கொண்டு ஆட்சி புரிந்தார் என்று இவர் வரலாற்றைச் சேக்கிழார் எட்டுப் பாடல்களால் கூறுவர். கூற்றுவர் இவ்வூரில் ஆண்டார் என்ற வரலாற்றுக்

கேற்ப, இங்கு கூற்றுவன் குளம், கூற்றுவன் திடல் என்ற பெயருடைய பகுதிகள் உள்ளன. "ஆர்கொண்ட வேற் கூற்றன் களந்தைக் கோன்" என்று சுந்தரர் திருத் தொண்டத் தொகையுள் பாடுகிருர்; ஆர்—ஆத்தி, சோழர்க ளடையாளமாலே. சுற்றி அகழியுள்ளது. இப்போது குள மாயிருக்கிறது. இதில் ஓரிடத்தில் தினமும் ஒரு தாமரை தோன்றி வெளிவந்து மலர்ந்து மூடி உள்ளே சென்று கொண்டிருந்ததென்றும், சோழ மன்னன் வந்தபோது அவ்வதிசயத்தை அவனிடம் சொல்ல அவன் வெட்டிப் பார்த்தபோது, அடியில் ஒரு சிவலிங்கம் காணப்பட்ட தென்றும் சொல்லுவர். சுவாமி சுயம்பு மூர்த்தி. மண் வெட்டப்பட்ட இடம் ரத்தம் கசிந்து சுவாமி மீது அவ் விடம் இன்றும் செல்வா படர்ந்து இருக்கக் காணலாம் என்று சொல்லுவர்.

கல்வெட்டு: அருள்மொழித் தேவ வடநாட்டுக் களப்பாள் என்று கல்வெட்டில் கூறப்படுகிறது. எட்டுச் சாசனங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை இக்கோயிலி லும், கைலாயநாதர் கோயிலிலும், அக்காலத்தே பெருமாள் கோயிலிலும் கண்டவை. வீர ராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு, மூலத்தானத்துச் சசயத திருப்பணியைக் குறிக்கிறது. எனவே கோயில் பழமை யாக ஆதித்த சோழன் காலத்து இருந்ததென உணரத் தக்கது. பாண்டியர் சாசனங்கள் பலவும் உள்ளன.

பாடல்: கருவூர்த் தேவர் திருசைப்பா இரண்டாம் பதிகம் 11 பாடல்; எல்லாம் பாடல்களிலும் களந்தை—ஆதித்தேச்சுரம் என்றே கூறுகிருர்.

2. திருமுகத்தலே.

பெயர்: கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பா நான் காம் திருப்பதிகம் கொண்டதலம், திருமுகததலே. ஆனல் இது இன்று இதே பெயரால் வழங்குவதாகத் தெரிய வில்லே. பதிகத்தில் பல இடங்களில் பன்னகாபரணர் என்ற பெயர் பயில்கிறது. இப்பெயர் திரிந்து பன்னகத்தெரு

என்ற பெயரால் இவ்வூர் இப்போது வழங்குகிறது. சுவாமி திருநாமம் பன்னகாபரணேசுரர்; அம்பிகை திருநாமம் சாந்தநாயகி; தலவிருட்சம் புன்னை. புன்னையினடியில் ஸ்தல விநாயகரும் பஞ்சமணி அம்மையும் உள்ளனர்.

இடம்: இத்தலம் திருத்தருப்பூண்டியிலிருந்து, நாகப்பட்டினம் செல்லும் பஸ் பாதையில் மூன்று மைல் சென்று கொக்காலடி அடைந்து அங்கிருந்து இடது புறம் வடக்கே செல்லும் மாறச்சேரி கடபிச் சாலையில் ஒன்றரை மைல் தூரம் சென்றால் பன்னகத்தெரு கோயில் அடையலாம். கோயில் ஊரை விட்டுத் தனியே வடக்கில் ஒதுங்கி உள்ளது. எதிரில் திருக்குளம், சந்தடியற்ற அமைதியான சூழ்நிலை.

கோயில்: கிழக்கு நோக்கி உள்ளது. சிறு கோபுரம், பழைய கற்கோயில, பள்ளத்திலிருந்து பிராகாரம் தூர்ந்து போய், அடியவர்கள் மூடுண்டனர். கோயில் விமானம் ஒரே தளமாய் உள்ளது. ஆறாவது பாடலில் "அடியேன் வினைபடும் உடல் நீ புகுந்து நின்றமையால் விழுமிய விமானம் ஆயினதே" என்று இதற்கு ஆதாரம் காட்டுவார். பொருத்தம் விளங்கவில்லை.

சிறப்பு: சூரிய பூசை ஐப்பசி மாதம் முதல்நாள் முதல் ஏழாம் நாள் வரை. மாசி மாதம் 15ஆம் நாள் முதல் 7 நாள்கள்.

வரலாறு: பன்னகம்—பாம்பு; பன்னகாபரணர் கோயில ஆதலால் பன்னகத்தெருவாகத் திரிந்தது. பாற்கடல் கடைந்தபோது கயிறு ஆக இருந்த வாசுகி, பூசித்துத் தன் வயிற்றுவலியைப் போக்கிக்கொண்டது. சூரியன் பூசை செய்த தலம்.

பாடல்: ஒன்பதாம் திருமுறையில் கருவூர்த் தேவர் திருவிசைப்பா, திருமுகத்தலைப்பதிகம், பத்து பாடல், 1, 3, 4, 10 ஆகிய நான்கு பாடல்களில் பன்னகாபரணர் என்ற பெயரைக் கூறிப் பாடுகின்றனர். முதல் ஐந்து

பாடல்களில் பவளவாய்மணி, மணிபவளவாய் என்ற தொடர்கள் காணப்படுகின்றன அடுத்த இரு பாடல்களில் பேரொளியே என்றும், அடுத்த இரண்டில் ஒண் சுடரே என்றும் இவர் இறைவனை விளிக்கிறார். இவற்றைப் பார்க்கும்போது இவை சம்பந்தப்பட்ட பெயர் இத்தலத்துக்கு இருந்திருக்கும் போலும்; விளங்கவில்லை. எல்லாப் பாடல்களும் அவருக்கு இறைவன் அருள் புரிந்த எளிமையை எடுத்து ஓதுகின்றன. இறுதிப் பாடலில் "ஆலையம்பாகின் அனையசொற் கருவூர் அமுதுறழ் தீந்தமிழ் மாலை" என்று இவர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

மூர்த்தி : தென்கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி மிக்க அழகு உடைய வடிவம் நிருதி விநாயகர் கோயில்; அடுத்து முருகன் தேவியரோடு தனிக்கோயில், பொதுவைச் சிற்பம்: பின் கோட்டத்தில் வழக்கமாய் இருக்கும் லிங்கோத்பவரோ, வேறு மூர்த்தியோ இல்லை. வாயு மூலையில் கருவூர்த் தேவர் பிரதிட்டை செய்த திருமுகத்தலை ஈசர், என்ற சிவலிங்கத் திருமேனி சிறிய வடிவில். மகாலக்ஷ்மி. வடபிராகாரத்தில் சண்டேசர், வழக்கம் போல் தனிக் கோயிலில் உள்ளார். முண்டிதமாய் இருக்கிறார். கீழ்ப்புறத்தில் பெரியதும் நடுத்தரமுமான பைரவர் வடிவங்கள். சனி பகவான்; அடுத்து சம்பந்தர் வடிவங்கள் இரண்டு, அப்பர் பன்னகாபரணர் மூலவர் நடுத்தரமான வடிவினர். போகசக்தி மிகச் சிறுவடிவம். அம்பிகை சிறு வடிவம். உற்சவ மூர்த்திகளில் சோமாஸ்கந்தர், சிறிய உருவினரான நடராசரும் அம்பிகையும்; கூத்தாடும் சம்பந்தர். அப்பர், சண்டேசர், மாணிக்கவாசகர், மற்றொரு சம்பந்தர், தேவியருடன் அமைந்த முருகர்; தனியான பாலமுருகர். விநாயகர், சந்திரசேகரர், அம்பிகை, பெரிய மூர்த்தி வடிவங்கள். கொக்காலடியில் இருந்த திருமால் தேவியரோடு இங்கு வைக்கப்பட்டுள்ளார். சிறிய வடிவங்கள்.

நிர்வாகம் : மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன நிர்வாகம். 1962ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது.

நிலம் உண்டு. தினசரி வாத்தியம் உண்டு. ஊரை விட்டு ஒதுங்கி இருப்பதால் கோயில் நல்ல நிலையில் உள்ளது.

3. திருச்சாட்டியக்குடி

இடம்: கருவூர்த் தேவருடைய திருவிசைப்பா ஏழாம் பதிகம கொண்ட தலம். கீழ்வேளூர்-கைச்சினம் சாலையில் தேவூருக்கு அப்பால் உளளது. சாலையின் மேல்புறம் கோயில். அமைதி நிறைந்த இடம்.

பெயர்: திருசாட்டியக்குடி, சாட்டியம் சுரம் என்றும், சுரம் தணித்த பெருமான் ஆதலால் இவ்வூர் சாட்டியக்குடி என்றும், இத்தல சுவாமி பெயர் அக்கினீசுவரர் என்றும் சொல்லுகிறார்கள். இன்றும் வெப்பு நோயாளிகள் இங்கு வழிபட்டுச் சுரம் நீங்கப் பெறுகிறார்கள் என்றும் சொல்வர். சுவாமி பெயர் வேதபுரீசர்; அம்பிகை வேத நாயகி. இவருக்கு வேதம் பூசித்ததால் இபபெயர். தல விருட்சம் வன்னி.

கோயில்: தனியாக ஒதுங்கிய இடத்தில் உள்ளது. மேற்குப் பார்த்த சந்நிதி. எதிரில் வேதபுஷ்கரணி தீர்த்தம். நல்ல நிலையில உள்ளது. முன்புறம் கோயில் வீடுகள் இரண்டு. வேறு குடியிருப்பு இல்லை. வாயிலை அடுத்து தனி விசுவநாதர் கோயில். தேவியரோடு முருகன் கோயில். மகாலக்ஷ்மி, தனித்த சஜங்களோடு குளக்கரை யில் தனி செல்வ விநாயகர் கோயில. அம்பிகை வடபால் தனியாக மேற்குப் பார்த்த கோயிலில் உள்ளார்.

மூர்த்தி: உற்சவர், திருநீலகண்டர்-மாணிக்கவாசகர்-உஷா பிரத்திபுஷாவுடன் கூடிய சூரியன் உள்ளனர். பழமையான வடிவங்கள். திரிபுரசம்மாரமூர்த்தி சிறப் பாக உள்ளார் உயர்ந்த வடிவம். மிகவும் அழகு பெற் றுள்ளது. பெரிய வில் பிடித்திருக்கிறார். நடராசர், அம்பிகை, பிற்கால வடிவங்கள் சிறியவை. சந்திரசேகரர் மூவரும் வடபால் மூன்று, தனிக் கோயில்களில் ஒருசேர அமைக்கப்பெற்றுள்ளனர்.

அம்பிகை நீண்டு உயர்ந்த வடிவம். சுவாமி மெலிந்து நீண்ட பாணம். பிராகாரத்தில் துர்க்கை, பிரமன், கிழக்கில் நவக்கிரகம், பைரவர் பெரியதும் சிறியதுமாக இருவர். சாண்டில்யர், கருவூர்த்தேவர் இருவரும் புதிய உருவங்கள். சம்பந்தர், அப்பர், குபேரன், விநாயகர், சூரியன். குபேரனை, கருவூர்த் தேவர் ஐந்தாம் பாடலில் குறிப்பிடுகிறார். சண்டேசா லிங்கோத்பவர். தென்கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி அடுத்து நர்த்தன விநாயகர். நிருதியில் கமல விநாயகர், சோமாஸ்கந்தர் கோயில். தல விருட்சமான வன்னி மரத்தடியில் வன்னிவன நாதரும், வேத விநாயகரும்.

பாடல்: கருவூர்த் தேவர் திருவிசைப்பா 8ஆம் பதிகம் 10ஆம் பாடல். சாட்டியக்குடியார், "ஏழிருக்கையில் இருந்த ஈசனுக்கே" என்றே எல்லாப் பாடல்களிலும் பாடுகிறார். சாட்டியக்குடி ஊரும் ஏழிருக்கை கோயிலும் என்பர். ஆறு தூரம் கடந்ததுவாக சாந்தமாகிய ஏழாவது இடத்தை ஏழிருக்கை குறிக்கிறது என்றும் சொல்வர். ஐந்தாம் பாடலில் "சாட்டியக்குடியார் இருமுகம் கழல் மூன்று ஏழுகைத் தலம் ஏழிருக்கை" என்றவிடத்து இரண்டு முகமும், மூன்று கால்களும், ஏழு கைகளும், அக்கினி தேவன் வடிவம். இவ்வடிவமாக இறைவன் இருக்கிறார் என்றும் சொல்வர் இருக்கை என்ற ஊரும் அருகே உண்டு. அம்பிகை கோயில் வலது புறம். மேற்கேயிருக்கிறது. தனி ஆவரணம், பெரிய கோயில்.

வரலாறு: அக்கினி பூசை, விரிவு சொல்லப்பட்டது. சாண்டில்ய முனிவர் (சாட்டியர்) பூசித்தமையால் சாட்டியக்குடி என்பர். இவர் உருவம் கோயிலிலும் உண்டு.

விழா: எட்டாந்திருநாளில் திரிபுரசம்மாரமூர்த்தி புறப்பட்டுச் சொக்கப்பனை கொளுத்துவது முன்னமே நடைபெற்றது. இப்போதில்லை. மாசிமகம் ஒருநாள் விழா மட்டும் நடைபெறுகிறது.

நிர்வாகம்: போதிய சொத்து உண்டு. நிர்வாகக் குழுவும், அதிகாரியும் உள்ளனர்.

உ

தணிகை வெண்பாவுரை

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

"தணிகை வெண்பா என்னும் இந்நூலினைச் செய்தவர் திருத்தணிகைக் கந்தப்பையரென்பவர். இவர் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருத்தணிகையில் வாழ்ந்திருந்த வர். வழி வழியாகத் தமிழ்ப்புலமையிற் சிறந்து விளங்கிய வீரசைவ குடும்பத்திற் பிறந்தவர். கவிராட்சச கச்சியப்ப முனிவரின் மாணுக்கர்களில் ஒருவர். தமிழ்ப்புலமையிற் சிறந்து விளங்கிய விசாகப் பெருமாளையரும் சரவணப்பெரு மாளையரும் இவருடைய தவப்புதல்வர்களே.

கந்தப்பையர், தணிகாசலப் புராணமும் திருத்தணிகைச் சந்நிதி முறையும் செய்தவர். இந்நூல் சந்நிதி முறையில் சேராத தனிப்பிரபந்தம்.

இந்நூல் தொடை விகற்பமான திருகுவெண்பா நாற்ப தும், தனிச்சொற்சிலேடையும் திருகும் பெற்ற வெண்பா அறுபதும் ஆக நூறு வெண்பாக்களையுடையது. இந் நூலில் ஒரு பொருட்பாடலும், இரு பொருட்சிலேடையும், முப்பொருட் சிலேடையும் நாற்பொருட் சிலேடையும் அமைத்துப்பாடி யுள்ளார்.

"விகற்பதொடை யாற்றணிகை வெண்பா நாற்பானும்
பகர்ச்சிச் சிலேடை யறுபானும்—அகற்சிபெறும்
ஒன்றிரண்டு மூன்றுநான் கொத்தபொருள் தந்துரைத்தான்
நன்றறிகந் தப்பமுனி நன்கு"

என்பது பாயிரச் செய்யுள்.

சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்த இந் நூல் வெண்பாக்களெல்லாம் முன்னிரண்டடிகளில் தணிகைமலையின் சிறப்பும் பின்னிரண்டடிகளில் முருகப்பெருமானது சிறப்பும் கூறுவன. இந்நூலில்வரும் சிலேடையும் திரிபும மடக்கும் நவின்றோர்க்கு நயம்பயப்பன. நூலின் பொருளை அறிதற்கு எழுதிய உரைமிகவும் பயனுடையது உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. ஏட்டுவடிவில் உள்ள இந்நூலின் சில வெண்பாக் களை அவற்றின் உரையுடன் அன்பர்கள் உணருமாறு சித்தாந்தத்தில் வெளியிடுகின்றேன்.

முதற்காப்பு :

காலைவணங் காவிரிஞ்சன் காலிற் றளைபூட்டும்
வேலன் றிருத்தணிகை வெண்பாவின்—மாலையையென்
ஞவிரிக்கப் பேதந்தா னண்ணுதெண் ணிந்திரன்பூங்
காவிரிக்கப் பேதந்தான் காப்பு.

என்றது. காலை வணங்கா விரிஞ்சன் தனது திருவடியை நமஸ்கரியாமல் சிறு குழவியென்று இகழ்ந்து போகின்ற பிரமனது, காலில் தளைபூட்டும் வேலன்—காலிலே விலங்கிட்டுக் குட்டிச்சிறையிலே போட்ட வேலாயுதத்தைப் படைத்த ஆறுமுகவன் தலமாகிய, திருத்தணிகை வெண்பாவின் மாலையை — அழகிய தணிகை வெண்பா வென்னும் இன்பத்தைக் கொடுக்கின்ற மாலையாகிய கோவையை, என் நா விரிக்க—எனது நாவினுலே விரித்துப்பாட, பேதந்தான் நண்ணுது—இலக்கணப்பழுதுகளான குற்ற வேறுபாடுகள் பத்தும் வந்தடையமாட்டாது, அதென்னவென்ருல், எண் இந்திரன்—தன்னை நினைந்து வேண்டிக் கொண்ட புரந்தரனது, பூங்காவிரிக்கு—சீகாழியில் வைத்த நந்தனவனத்தினது விரிவுக்கு நீரில்லாத காலத்து, அப்பே தந்தான்—சலத்தைக் காவேரியாருகத் தந்து ரட்சித்த கணபதியானவன், காப்பு—இதற்குக் காப்பாகையாலென்றவாறு. காப்பு முற்றும்.

தணிகை வெண்பாவுரை

அன்னந் தனிவீ டடியார்க் கொருங்குதவித்
தன்னந் தனியாந் தணிகையே—பொன்னுலகக்
கைமாப் பிடிக்கேற்ருர் காட்டிலெம் பிராட்டியிடுங்
கைமாப் பிடிக்கேற்ருர் காப்பு.

என்றது. அன்னம் - இம்மையிலே பசிக்கு அன்னமும் வஸ்திரமும், தனி-ஒப்பற்ற, வீடும்-மோட்சமும், அடியார்க்கு-தன்னை வணங்கும் அடியவர்களுக்கு, ஒருங்கு உதவி-ஏகமாய்க் கொடுத்து, தன்னந்தனியாம தணிகையே-பூலோகத்தில் தனக்குத்தானே நிகரான தணிகாசலமே, பொன்னுலகம்-தெய்வலோகத்திலே அவதரித்த, கைமா-வெள்ளை யானை

யளித்த, பிடிக்கேற்ருர்-பெட்டை யானை போன்ற நடையை யுடைய தெய்வயானையம்மைக் கிசைந்த அழகுடையவர் காட்டில்-கானகத்திலே. எம்பிராட்டி-திணைப்புனங் காத்திருந்த எனது தாயாகிய வள்ளியம்மை, இடும்-கொடுக்கப்பட்ட, கை-தமது கரங்களை, மாப்பிடிக்கு-திணைப்பிண்டியான ஒரு பிடிமாவுக்கு, ஏற்ருர்-ஏற்று வாங்கினவர், காப்பு-எந்நாளுங் காப்பதென்றவாறு.

இதனுள் கைமாப்பிடிக்கேற்ருர் என்னுந் தொடரில் மாப் பிடியெனபதனைப் பிடிமா வென்றும் கையென்பதனோடேற்ரு ரெனவும் மாறிக் கூட்டிக்கையேற்ருரென்றுரைத்துக்கொள்க. (2)

தனிச் சொற்சிலேடை

காமமய லுற்றவருங் காசகலும் பூசுரருஞ்
சாமமறை கூறுந் தணிகையே—தேமருவுஞ்
செய்யா வினன்குடியான் செல்வமணி மாடமுஞ்சேர்
மெய்யா வினன்குடியான் வெற்பு.

என்றது காமமயலுற்றவரும்-காமவிகாரத்தையுடைய ஸ்ரீகளும் புருடரும், காசகலும்-குற்றநீங்கிய, பூசுரரும்-பூமியின் கட்டேவராகிய மறையவரும் சாமமறைகூறும் தணிகையே-காமவிகாரங்கொண்டவர்கள், சாமம்-அர்த்த சாமத்திலே, மறைகூறும்-ரகசியம் பேசுவர், பூசுரர்சாமமறை கூறுமென்றது-சாமவேத பாராயணம் பண்ணுவர், இப்படிக் கொத்தணிகை யென்னுந்தலமே, தேமருவும்-வாசனை பொருந்திய தாமரை முதலிய பூ நிறைந்த, செய்-கழனியும் ஆவி-குளமும். நன்குடி-நல்ல குடிகளும், ஆன்-பசுக்களும், செல்வம்-ஐஸ்வரியமும், மணி-இரத்தினங்களும், மாடம்-உப்பரிகைகளும், சேர்-நிறைந்திருக்கப்பட்ட, மெய்-உண்மையைக் கொடுககப் பட்ட, ஆவினன்குடியான் - பழனிவெற்பையுடையவனது, வெற்பு-வெற்பாகிய மலையென்றவாறு.

இதனுள் முருகனுக் கினிமையாதலிற் சாமவேதமென்று பிரித்தெடுத்துரைத்தார் தேமருவுஞ் செய்யெனவே தாமரை முதலிய நீர்ப்பூ வருவித்துரைக்கப்பட்டது. செல்வமணி

மாடமென்பதனை யொரு தொடராக்கிச் செல்வ நிறைந்த அழகிய மேனிலையெனினுமொக்கும் பழனிக்கு ஆவினன் குடியென்றும் பெயரெனவறிக. (43)

வேரலரி யார்குவட்டும் வெங்கயத்தின் மத்தகத்துஞ்
சாரலரி வாவுந்தணிகையே—பாரிலெழில்
நண்குறிஞ்சிக் கோவிலா ணாரதரை வீணையெழும்
பண்குறிஞ்சிக் கோவிலான் பற்று.

என்றது வேரலாகிய மூங்கிலினது, அரியார் - அரிசிகள் நிறைந்து கிடக்கும், குவட்டும்-மலையுச்சியினும், வெம்-கொடுமைபெற்ற, கயத்தின்-யானையினது, மத்தகத்தும்-கும்பத்திலும், சாரலரிவாவும் தணிகையே. குவட்டில் சார்-சார்ந்துவரப்பட்ட அலரியாகிய சூரியன், வாவும்-தாவிப்போவான். மத்தகத்தில் சாரலிலிருக்கும் அரியாகிய சிங்கங்கள் பாய்ந்தேறிக் கொள்ளுந் தணிகைமலையே. பாரில்-இந்தப் பூமிமேல எழில்நண்-அழகுபொருந்திய, குறிஞ்சியாகிய மலைகளில் வாழுங் கோவிலையுடையவன். நாரதரை வீணை எழும்-நாரதருடைய யாழிலெழுந்த பண்குறிஞ்சிக்கு குறிஞ்சிப் பண்ணுக்கு, ஒவில்லான்-ஒழிவில்லாதவனது பற்றாகிய இடமென்றவாறு.

இதனுள் அலரியாகிய சூரியன் வாவுதல் கும்பிடுதலுமாம். குன்றுதொறுடலினுல் குறிஞ்சிக் கோவிலானென்றார். ஆரீறு சிறப்பின்கண் வந்தது. குறிஞ்சிப் பண்ணென மாறியுரைக்க. தன்தோழனுதலினுல் அவனது வீணையோசைக்கு அதிக மோகமுள்ளவனுதலில் ஒவிலான் என்றது. (71)

முப்பொருட் சிலேடை

ஏழு சுனையு மெயிலு மிரும்பொழிலுந்
தாழுமர வங்கூர் தணிகையே—வாழுமனை
காட்டுமறி வென்றுவிண்டான் காதல்மரு கன்வீட்டில்
நாட்டுமறி வென்றுவிண்டா னுடு

என்றது. ஏழு சுனையும்-சத்த விருடிகளெடுத்த தெய்வத் தன்மையவாயெப்போதுந்தானே மேலேறிச் சுரந்து நீர் பெருகாநின்ற சத்த சுனைகளும், எயிலாகிய திருமதிலும், இரும்பொழிலும்-பெருமை பொருந்திய தோப்பும், தாழுமரவங் கூர்தணிகையே - ஏழுசுனை; தாழும்-தங்கிய, அரவம்-சத் தத்தை, கூர்-மிகுந்திருக்கும் எயிலானது. தாழ்-நீண்ட, அரவு-ராகு கேதுக்கள் அங்கு-முடிமேலே, ஊர்-தவழ்ந்து போகாநிற்கும், பொழில்கள் : தாழ்-வணங்கிய, மரவமாகிய வெண்கடம்பை, கூர்-நெருக்கமாகப் படைத்திருக்கு மித்தன் மையவான தணிகை மலேயே, வாழுமனே-தனதில்லாளாக வாழு மனேவியான சிதை, காட்டும்-காண்பித்த, மறி-மானேப் பின்தொடர்ந்து போய்க்கொன்று, வென்று-செயித்து, விண் டான்-தனது நாயகியைப் பிரிந்த இராமனது. காதல்-அன் புடைய, மருகன்-மருமகன், வீட்டில் நாட்டும்-மோக்கத்தி லிருத்தும், அறிவு-மெய்யறிவு என்று இப்படி அடியேனுக்கு, விண்டான்-உபதேசித்தான் அவனது நாடாகிய தேயமென்ற வாறு.

அறிவே வீடென்று சொன்னவன் என்க. எல்லாரும் நாட்டி நிச்சயித்த முடிவாகிய பொருள் அறிவாதலறிக. இதற்குக் காரணம் அருணகிரிநாதர் "அறிவையறிவது பொருளென வருளிய பெருமாளே" என்றும் திருமூலர் "தன்னே யறிந்தபின் யாரையறிவது" என்றும் பிறரும் "அறிவுருவா மிறைவனென்றதும்" காண்க மற்றும் வருவனவற்றாலுணர்க. அடியேனுக்கு என்பது வருவித்துரைக்கப்பட்டது. (89)

நாற்பொருட் சிலேடை

பங்கயமு மேரிகளும் பாவையர்கை யும் பணியுந்
தங்கவளே சூழுந் தணிகையே—திங்கணுதற்
செந்திலகத் தன்புனிதன் செல்வன் கடறகரைசேர்
செந்திலகத் தன்புனிதன் சேர்வு.

என்றது. பங்கயமான தாமரைப் பூவும். ஏரிகளாகிய நிலே பெறக் கரைபோட்டுக் கட்டி வைதத சலங்களும், பாவை யர் கையாகிய பதுமைபோன்ற மடந்தையரது கரங்களும்,

பணியான பாம்புகளும், தங்கவளை சூழும் தணிகையே பங்கயப் பூக்களிலே தங்கியிருக்கும்படி வளையான சங்குகள் சூழ்ந்து மொய்க்கும் ஏரிகள் தமதிடத்திற் பொருந்திய வள்ளைக்கொடிகள் சுற்றிப் பிணைந்து படரும். பாவையர் கைகள், பொன்வளையல்களைத் தரித்திருக்கும். பணிகள் இரை தேடிவந்து கரந்திருக்கும் புற்றுவளைகளை மனத்திலெண்ணிக் கொண்டு வருமித்தன்மையவாய தணிகை வெற்பே.

திங்கணுதற் செந்திலகத்தன்-அர்த்த சந்திரன்போன்ற திருநுதலிலே சிந்தூரப் பொட்டையணிந்தவன், புனிதன்-சுத்தபவுத்திரமானவன், செல்வன்-சகல ஐஸ்வரியங்களையும் படைத்தவன், கடற்கரை சேர்செந்திலகத்தன்-சமுத்திரத்திற் சேர்ந்திருக்கும் திருச்செந்தூரையிடமாக வென்று முடையவன் சேர்வாகிய இடமென்றவாறு.

இதனுள் சரவண மென்னுந் தருப்பையிலவதரித்தலிற் புனிதனென்றார். இறைவனது பிள்ளையாதலின் சகலசெல்வமும் படைத்தவனெனக் கூறவேண்டிச் செல்வனெனப்பட்டது. அன்றி மோட்சமாகிய பெருஞ் செல்வம் படைத்தவனெனினுமமையும். (98)

ஆராய்ச்சிப் பகுதி:-

"ஞானவுருவும் மாணிக்கவாசகரும்"

(வித்துவான் சிவ. கன்னியப்பன், காஞ்சிபுரம்)

உலகில் இறைவன் அருவ வடிவாகவும் உருவ வடிவாகவும் அருவுருவ வடிவாகவும் திகழ்கின்றான். அருவம் என்பது சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்காகும். உருவம் என்பது மகேசுவரன், உருத்திரன், மால், அயன் என்னும் நான்காகும். அருவுருவம் என்பது அறிவுடையார்க்கு விளங்கித் தோன்றும் ஞானவுருவமாகும். இந்த ஞானவுருவினைத் துவரக் கைவரப் பெற்றவர் நால்வருமே ஆவர். ஆயினும் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருந்தகையார் சிவத்தினது ஞானவுருவின் நிலையைப்பற்றிக் கூறும் பொழுது,

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"

என்கின்றார். இதில் ஆண்டவனுக்கு ஒரு பெயரில்லை, ஓர் உருவமில்லை என்பது உணர்த்தப்படுகின்றது. இதனைச் சொருப நிலை என்பர்.

ஆண்டவன் நம்முடைய அறியாமையாகிய இருளைப் போக்கக்கூடியவன். தொடர்ந்து வருகின்ற இறப்பும் பிறப்பும் ஆகிய துன்பத்தினைப் போக்கக்கூடியவன். இக்கருத்துப்பட மணிவாசகப் பெருமானார்,

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய்—அன்பமைத்து
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து."

எனத் திருவாசகத்திலே பாடுகின்றார்.

குறைவிலா நிறைவு:—

ஆண்டவன் ஒருகுறையும் இல்லாதவன். எல்லா நிறைவும் உடையவனாகி விளங்குபவன். குற்றமற்ற அமுதமயமானவன். செழுமையான ஒளிக்குன்று போன்றவன். வேதமாகவும், வேதத்தின் உட்பொருளாகவும் விளங்குகின்றவன். இதனையே மாணிக்கவாசகர்,

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே"

என்கின்றார்.

எல்லையற்ற பொருள் :—

ஆண்டவன் எல்லை இல்லாதவன். மாற்றமும் மனமும் கழிய நின்றவன். இதனை வாதவூரடிகள் பிறிதொரு பாட்டிலே தம்மை எவ்வளவு தாழ்த்தியுரைக்க முடியுமோ அவ்வளவும்

தாழ்த்தி, முரணாகச் செய்யுள் அமைத்துள்ளார். அதில் இறைவனது உயர்ச்சியை முழுதும் உணர்த்தினார்.

"யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை."

என இறைவனது எல்லை அற்ற தன்மை நவிலப்பட்டுள்ளது.

பேரருளாளர் :—

இறைவர் பேரருளாளராவர். நல்வினை தீவினையாகிய இரண்டினையும் அடியோடு போக்கக்கூடியவர். பின்னைப் பிறப்புக்களையும் தோன்றாவாறு செய்கின்றவர். துயரங்களை யெல்லாம் போக்கும் மருந்துமாவர் என்றருளுகின்றார் மாணிக்க வாசகர்; அதாவது,

"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—தென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து."

என விளக்கப்பட்டுள்ளது.

புகழத் தக்க பொருள் :—

புகழத்தக்க பொருளாக விளங்கக் கூடியவர் ஆண்டவன் ஆவர். அவர், 'தேவர்கள், மண்ணாளும் மன்னர்கள் முதலான எல்லார்க்கும் மேம்பட்ட சிறப்பினை யுடையவர். அத்தகை பேரர் எளியவராகி வந்து கடைப்பட்ட எம்மையும் ஆட் கொண்டார். அவரைப்போற்றிப் புகழ்வோம்' என்னும் பொருள்பட மாணிக்கவாசகர்,

"விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்

பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.''

என இறைவனது திருவிளையாடலை உளங்கொண்டு உரைக்கின்றார்.

இதுகாறும் ஞானவுருவின் நிலையைப்பற்றி மாணிக்கவாசகப் பெம்மான் அருள உணர்ந்தோம். இனி, அவரை எய்தற்குரிய வழிகளைக் காண்போமாக.

மறைநூல்வழி ஆண்டவன் எதையும் நேராக அருளுவதில்லை. மெய்யடியார்களின் வாயிலாகவே அருள் புரிகின்றான். மாணிக்கவாசகர் சிறந்த மெய்யடியார். ஆதலினால்தான் அவர் பாடப் பரமன் ஏடெழுதினார். நான் என்னும் தன் முனைப்பு அற்றவரே சிறந்த மெய்யடியாராவர். இறைவன் அருள்பெற்றவர்கள் கூறும் மொழிகளெல்லாம் ஆண்டவன் மொழிகள் என்று சொல்லப்படும். அத்திரு மொழிகளே மறைநூல்கள் என்று வழங்கப்படுகின்றன. திருவாசகம் இதற்கோர் எடுத்துக்காட்டாகும். இம்மறை நூல்கள் இம் மொழியில்தான் தோன்ற வேண்டும் என்னும் நியதியில்லை; எம்மொழியிலாயினும் யாண்டாயினும் தோன்றலாம்.

உலகில் மானிடர்கள் நன்னிலையின்கண் உய்யும் பொருட்டுப் பன்மார்க்கங்கள் திகழ்கின்றன. அவற்றுள் முதன்மையாக விளங்குவன சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களாகும். இந்நான்கு மார்க்கங்களையும் தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம் என வடமொழியிற் கூறுவர்.

1. சரியை :—

எம்பெருமானின் திருவுருவத்தை நோக்கி வழிபடுதல். அவாவினாலே பத்திர புட்பங்களைத் தரக்கூடிய மரங்களை வைத்து வளர்த்தலும், இண்டை, தொடை முதலிய திருமாலைகளைக் கட்டுதலும், இறைவன் மீது பாக்களைப் பாடுதலும், ஆலயங்களில் திருவலகிடுதலும், ஒளிமிக்க விளக்குகளை ஏற்றுதலும், அடியவர்க்குத் தொண்டு செய்த

லும் ஆகியவை சரியை பாதத்தை அநுட்டிக்க வல்லவர்கள் செய்ய வேண்டுவனவாகத் திருவாதவூரர் புராணத்திலே கூறப்படுகின்றது.

2. கிரியை :—

வாசனைப் பொருள்களும், நறுமணங்கமழும் தூபமும், ஒளிபொருந்திய தீபமும் பரிசுத்தமாகிய திருமஞ்சனமும், கொத்துக்களில் மலர்ந்த வாசனை மலர்களும் மற்றுமுள்ள பூசைக்குரிய உபகரணங்களைக் கொண்டிலங்குவது. மாயா காரியமாகிய காமம் முதலிய தீய குணங்கள் இல்லாதிருத்தல், அகப்பூசை புறப்பூசைகளைச் செய்தல், அக்கினி காரியம் செய்தல் ஆகிய செயல்கள் இறைவன் திருவருளை எய்துதற் குரியன.

3. யோகம் :—

சாத்துவிகம் இராசதம் தாமதமென்னு முக்குணங்களை யுஞ்சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களாகிய ஐம்புலன்களோடு சேர அடக்கி, மூலாதாரத்தினின்றும் பிராணவாயுவை மேலெழுப்புகின்றது. இடைபிங்கலையாகிய இரு நாடிகளையும் அடைத்து, சுழிமுனையாகிய நடு நாடியைத் திறந்து, தியானத் தானமாகிய புருவமத்தியில் சூக்கும வகையாற் செய்யப்படும் அநவரதத்தாண்டவச் சிலம்பொலியோடு போய், தத்துதியாகிய ஸ்ரீ பஞ்சாட்சரங்களும் ஏகாட்சரமாந்தன்மையை ஞானக் கண்ணினாலே தரிசிப்பது, சிவயோகிகளே இதனைக் கைவரப் பெற்றவராவர்.

4. ஞானம் :—

எல்லாக் கலைகளையும் ஆகமநூற் பாகுபாட்டையும் ஓதி யுணர்ந்து, அந்நூற்களில் கூறிய பதி, பசு, பாச மென்னுந் திரிபதார்த்த லட்சணமே முக்கிய பொருளென்று கருதிய வர்கள் சிவஞானிகள். அவர்கள் மனத்தினிச்சயித்து, முன் செய்து போந்த சிற்றறிவு சிறு தொழில்களனைத்தும் பயனில வென்று கண்டு கழித்து, முன்னர் அச்சிற்றறிவின் விரிவைப் போல் பின்னர்ச் சிவஞானம் விரிந்து தோன்றப்பெறும் மனத்தை அடைவர்.

இறை ஞானத்தைப் பெறவேண்டுமானால் நம்மைச்சார்ந்த ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்க வேண்டும். இவைகள் பாசம் எனப்படும் இப்பாசம் அகலப் பதியன்பு தோன்றும்; அதுவளரும், அன்பும அதற்குத் தக்க பண்பும் ஓங்கி வளரவேண்டும். யான் என்கின்ற அகங் காரமும் எனது என்கின்ற மமகாரமும் அறவே விட்டு நீங்க வேண்டும். அப்பொழுதுதான் இறைஞானம் கைகூடும்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.''

ஆண்டவன் எல்லாப் பொருளின் வடிவாகி நின்று நம்மை யெல்லாம் கூத்தாட்டுவித்துக் கொண்டிருக்கின்றான். அதன் வழி நாம் உலகில் நின்று ஆடிக்கொண்டிருக்கின்றோம்.

சிவானந்தப் பெருவாழ்வைப் பெற்றவர்கள் சொன்ன தில்லை. சொன்னவர்கள் பெற்றதில்லை. இதனையே 'கண்டவர்-விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்றனர்.

''இங்ஙன் இருந்ததென் றெவ்வணஞ் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற''

என்கின்றார் திருவுந்தியாசிரியர், உய்யவந்த தேவநாயனார். அதாவது, குருமூர்த்தமாக வாய்க்கப் பெற்ற பேரின்ப உணர் வினை, இப்படி இருந்ததென்று ஓர் உவமையில் வைத்துக் கூற முடியாது. அதற்கு ஒப்புதல் அதுவே ஆகும். அறவும் அறிவ தன்றி அறிய முடியாது என்கின்றார்.

இத்தகைய பரம்பொருளை, ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த பேரின்பத்தை மாணிக்க வாசகர் குருவருளால் எய்திய ஞானத்திலே வழிபட்டுப் பேரின்பத்தை எய்தி, அதை நமக்கும் திருவாசகமாக அருளினார்.

பூம்பாவையார்

(வித்துவான். சி. குமரேச பிள்ளை)

உலகமெலாமுணர்ந்து ஓதுவதற்கு அரியவனாகி, மும்மலம் நீங்கப்பெற்றார்க்கே உணர்தற்குரிய அருவமாய் நிற்கும் சிவபெருமான், உலகெலாம் தம்மை உணர்ந்து உய்வதன் பொருட்டு அருவுருவாகிய அலகில் சோதிவடிவனாகி நின்று ஆணவமலம் ஒன்றையே யுடைய விஞ்ஞான கலர்க்குத் திருவருள்புரிந்தும்; நிலவுலாவிய நீர்மலி வேணியனாகத் திருவுருக்கொண்டு ஆணவம், கன்மம் என்னும் இருமலமுடையார்க்குத் திருவருள் புரிந்தும்; சிவலிங்கத்திலும் சிவனடியார் திருவேடத்திலும் பொருந்தி நின்று ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடைய சகலருக்குத் திருவருள் புரிந்தும் உய்வித்து வருகின்றான். எனவே சகலர்களாகிய நாம் சிவனடியார்களையும் சிவாலயங்களையும் சிவனெனவே யெண்ணி வழிபட்டுவர சிவபரம் பொருளின் திருவருளுக்குரியராவோம் என்பது சித்தாந்தத் துணிவு. இத்துணிவைப் பூம்பாவையென்னும் பூங்கொடி வாயிலாக வலியுறுத்தி மெய்ப்பிக்கின்றார் ஞானசம்பந்தப் பெருமான்.

சென்னை நகரின் வடபால் இன்று மயிலாப்பூர் என்று வழங்கப்பட்டு வரும் பகுதி, திருமுறைகளில் மயிலையென்றும், மயிலாப்பு என்றும், மயிலாபுரி என்றும், வழங்கப்பட்டுள்ள பழம்பதியாகும். “துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித் தொன்மயிலை” என்று சுந்தரரும், “மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பு” என்று அப்பரும், ‘மடமயிலை’ (மடம்: அழகு) என்று சம்பந்தரும் “செல்வ மல்கு திருமயிலாப்புரி,” “மன்றுபுகழ் திருமயிலாப்புரி” என்று சேக்கிழார் பெருமானும் போற்றுகின்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது அப்பதி. அப்பதியில் பண்டை நாளில் பெருமான் கோயில் கொண்டருளிய இடம் கடற்கரையாகும். அருணகிரியார் காலம் வரையில் அக்கோயில் கடற்கரையிலேயே யிருந்ததென்பது “கடலக்கரை திரையருகே சூழ்மயிலைப்பதி தனில் உறைவோனே” என்னும் திருப்புகழ்ப் பகுதியால் அறியலாம். பதினாறாம் நூற்றாண்டினிடையே நம் நாடு புகுந்த போர்ச்சுகீசியர் அவ்வாலயத்தைத் தகர்த்துக் கோட்

டையையும், தம் தொழுகைக்குரிய இடத்தையும் கட்டினர். அதற்குப் பிறகு நகரின் உட்புறத்தில் தற்போதிருக்கிற ஆலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும். கோயில் மாறினாலும் கோயில் பெருமான் மாறாதிருக்கின்ற பெருமையுடையது மயிலாப்பூர். பண்டைநாளில் பெருந துறைமுகமாகவும் வணிகப் பெருமக்களது உறைவிடமாகவும் விளங்கியது.

அப்பதியில் வாழ்ந்து வந்த வணிகப்பெருமக்களுள் தலை சிறந்த ஒருவராக வாழ்ந்து வந்த பெரியார் சிவநேசர். அவர் வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டினார். அவரது மரக் கலங்கள் எப்பொழுதும் கடற்கரையில் வரிசை வரிசையாக நிற்கும். கலங்கள் வழிவந்த பொருட்களைத் தம் மனையி லேயே யிறக்குதற்கு வசதியாக அவரது மனை கடற்கரையி லேயே யமைந்திருந்தது. அந்நிலையில் எல்லையில்லாத இரு நிதி வளத்தினராக வாழ்ந்து வந்தார் சிவநேசர்.

சிவநேசரது புறவாழ்க்கை சீரும் செல்வமும் நிரம்பி யிருந்ததுபோல் அகவாழ்க்கையும் சிவச்செல்வம் நிரம்பி யிருந்தது. அவரது உள்ள நிலையைச் சேக்கிழார்பெருமான்,

"தம்மை உள்ளவா றறிந்தபின் சங்கரர்க் கடிமை
மெய்ம்மை யேசெயும் விருப்புடன் மிக்கதோர் அன்பால்
பொய்ம்மை நீக்கிய பொருளிது எனக்கொளும் உள்ளச்
செம்மை யேபுரி மனத்தினார் சிவநேசர் என்பார்"

என்று கூறுகின்றார். தம்மையே உள்ளவாறு உணர்தலாவது பதி பசு, பாச நிலையுணர்தல். அவ்வுணர்வு பெற்றமேலோரை மெய்கண்டதேவர் சிவஞானபோத அவையடக்க வெண்பாவில் "தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்று குறிப்பிடுகின்றார் இத்தொடர்க்குச் சிவஞான முனிவர் "உடைப்பொருளாகிய தம் இயல்பினை உணர்ந்து தம்மை யுடையானாகிய தலைவனை உணரும் சித்தாந்த சைவர்" என உரைவகுப்பர். சிவபெருமானின் உடைமைப் பொருளாகிய தம்முடைய இயல்பினையும் உணர்ந்து, தமது தலைவராகிய சிவபெருமானின் தன்மையையும் உணரக்கூடியவர்கள் சித்தாந்த சைவர் எனப்படுவர்—என்பது அதன் விளக்கம்.

தம்மை உள்ளவாறு அறிதலும் பொதுவகையானுணர்தல், சிறப்புவகையானுணர்தல் என இருவகைப்படும். பொதுவகையானுணர்தலாவது :—"உலகமானது அவன், அவள் அது என்று சுட்டி அறியத்தக்க மூன்று பாகுபாடுகளை உடையதாய் தோன்றல். வாழ்தல், அழிதல் எனும் முத்தொழிற்பட்டு இயங்குகின்ற காரணத்தால் இயக்குபவனாகிய தலைவன் (பதி) ஒருவன் உண்டென்றும்; அப்பதியே அநாதி முத்தனாக சத் சிதானந்த வடிவினனாக விளங்கும் முழுமுதற் பரம்பொருள் என்றும்; அப்பரம்பொருளே உயிர்களுக்கு வினைக்கேற்பத் தனுகரண புவன போகங்களை (பாசம்) அதாவது உடல் மனம் அறிவு இடம் அநுபவம் ஆகியவைகளைத் தம் சிற்சத்தியாகிய ஆணையால மாயையில் நின்றும் ஆக்கி, அளித்து, அழித்து முத்தொழில் படுத்தி வருகின்றான் என்றும்; உயிர்கள் (பசு) தனுகரணங்களுக்கு அப்பாற்பட்டதாய் நின்று அவற்றின் வழி உலக இன்பங்களை அநுபவிப்பனவாயும், தனுகரணங்களை விடுத்துப் பதியையுணரும் உணர்வுடையனவாயும் உள்ளன என்றும், கற்றல் கேட்டல் வாயிலாக உணர்தல். இனி சிறப்புவகையால் உணர்தலாவது :—அப்பொது உணர்வு பெற்ற உயிர்களுக்கு இறைவனே குருவாய் நின்றுணர்த்த, தனு கரண புவன போகங்கள் கானல் நீர் போன்று நிலையற்றதென்றும், இவற்றை உணர்கிற அறிவால் அதாவது பாச உணர்வால் பதியைக் காணமுடியாதென்றும் உயிர்கள் உணர்ந்து, ஞானக்கண்ணால் சிந்தையில் பதியைநாடி உணர்தலாகும்! அச்சிறப்புணர்வினைச் சிவநேசர் பெற்றிருந்தார் என்பதனையே "தம்மையே உள்ளவாறு அறிந்து" என்னுந் தொடரால் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

அவ்வுணர்வைச் சிவநேசர் பெற்ற பிறகு "சங்கரர்க்கடிமை மெய்ம்மையே செய்யும் விருப்புடன் மிக்கதோர் அன்பு,டையவரானார் அதாவது நிலைத்த இன்பம் செய்கின்றவராகிய சிவபெருமானார்க்கு அடிமைபபட்டு, சிவத்தொண்டினை உண்மையாகிய சைவநெறிக்கு மாறுபடாமல் செய்யவேண்டுமென்ற விருப்பமும் சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்துமன்பும் உடையவரானார். ஆகவே "பொய்ம்மை நீக்கிய பொருளிது எனக் கொள்ளும் உள்ளச்

செம்மையேபுரி மனத்தினர் '' ஆனார். அதாவது, சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் கொள்ளுகின்ற அன்பே, பாச உணர்வு (உலகப்பற்று) நீங்குதற்குரிய பொருளென்றுணர்ந்து, அவ்வுணர்வு நீங்காதிருக்க அஞ்செழுத்தை விதிப்படி ஓதுதலும், சிவாலயங்களையும், சிவனடியார்களையும் சிவனெனவே வழிபடுதலுமாகிய செம்மை நிலையிலேயே நிற்பவரானார். ஆகவே,

'' கற்றை வார்சடை முடியினர் அடியவர் கலப்பில்
உற்ற செய்கையில் ஒழிவின்றி உருகிய மனமும்
பற்றி லாநெறிப் பரசம யங்களைப் பாற்றும்
செற்ற மேவிய சீலமும் உடையராய்த் திகழ்வார் ''

சிவனடியார்கள் கூட்டுறவிலே பொருந்தி அவருக்கு வேண்டுவன செய்து, இடைவிடாது தைலதாரை போல் உருகிய மனத்தினை உடையவரானார் அக்காரணத்தினாலேயே அவருக்கு இறைப்பற்றில்லாத சமண புத்த மதங்களின்மேல் வெறுப்பும், அம்மதங்களை மக்கள் சமூகத்தினின்று மகற்ற வேண்டுமென்ற விருப்பும் உண்டாயிற்று. கணவன்பால் பேரன்பு கொண்ட கற்புடைய ஒரு பெண், தன் கணவனிடம் அன்பில்லாதவர்களிடத்தும், கணவனைப் பழிக்கும் பகைவரிடத்தும், தானும் பகைமை கொண்டு அவரை வெறுத்தொதுக்குவதுபோல, சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் உண்மை அன்பு பூண்டொழுகும் செம்மை உள்ளத்தினரான சிவநேசர், அவ்வன்பில்லாத நெறிகளையுடைய பரசமயங்களிடத்து வெறுப்புடையவராய்த் திகழ்ந்தார்.

சிவநேசரது இத்தகைய அன்பு, அக்காலையில் சமண சாக்கியங்களை ஓட்டி சைவம் பரப்பிவந்த திருஞானசம்பந்தப்பெருமானிடம் அவரை ஈடுபடச் செய்தது. சம்பந்தப் பெருமான் தம் மூன்றுமாண்டு நிறைவுநாளின்போது தந்தையாருடன் நீராடச் சென்றதையும் தந்தையார் நீரில் மூழ்கிய போது குளக்கரையில் அழத்தொடங்கியகாலை பண்டுதிருவடி மறவாப்பான்மையாராயிருந்த நினைவு எழத் திருத்தோணிபுரத்தார் கோபுரம் பார்த்து 'அம்மையே அப்பா'' என அழைத்தருளச் சிவபெருமான் அம்மையப்பராகி எழுந்தருளி

ஞானப்பாலளிக்க ஞானசம்பந்தரான பெருமையையும் கேள்விப்பட்டு அப்பெருமானிடம் பெரிதும் ஈடுபாடுடையவரானார். அப்பெருமான் பதிகள் தோறும் சென்று பதிகங்கள் பாடிச் சமண் சாக்கியங்களை இழித்து அழித்து வருவதைக் கேள்விப்பட்டு மேலும் அவர்பால் உருகிய மனமுடையவரானார். அப்பெருமான் திருவடிக்கு இடையறா அன்புடையவராகி, இரவும் பகலும் அவரருட் டிறம் சொல்லுதலும் கேட்டலுமாகிய தொழிலை மேற்கொண்டனர். இவ்வாறு சிவநேசர் புறச்செல்வமும் அகச்செல்வமும் பெற்றவராகிப் புகழோடு உலகில் பொருந்தி வாழ்ந்து வந்தாரெனினும்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலன் நன்மக்கட் பேறு"

ஆகையால் மகவு இல்லாக் குறையால் மனைவாழ்க்கையில் மருண்டார். ஆண்டவனிடமே தன் குறையை விடுத்தவராகி அருந்தவங்கள் புரிந்தும், அடியார்க்கு அருச்சனைகள் புரிந்தும் வந்தார். அந்நலத்தால் தாமரை மலரில் இலக்குமி தேவி தோன்றியதுபோல அவரது மனைவியார் வயிற்றினின்றும் ஒரு பெண்கொடி பிறந்தாள். மகவு பெற்ற மகிழ்ச்சியால் அவர் சுற்றம் யாவும் மகிழும்படியாக அளவற்ற செல்வங்களை வாரி வீசினார். சிவனடியார்களுக்குப் பூசனைகள் இயற்றினார்; மறையவர்க்கு வேண்டியன வெல்லாமளித்தார்; பத்துநாட்கள் வேத முறைப்படி மங்கலவிழா நடத்தினார். பத்தாம் நாள் மங்கல விழாவின்போது அவர், தம் குழந்தையைக் கையிலெடுத்தார்; அதன் உறுப்புகளில் அழகு விளங்கும் தன்மைகளையெல்லாம் உற்று நோக்கினார்; அவை பூமகளாகிய இலக்குமியின் உறுப்புக்கள் போல அழகும் பண்பும் உடையனவாக விளங்கினவாதலின் அக்குழந்தைக்குப், "பூம்பாவை" எனப் பெயரிட்டார்.

மாதந்தோறும் மங்கலச் சடங்குகளும் நல்வினைகளும் நகரத்தார் கூடிச் செய்ய, ஓராண்டு நிறைந்து தளர்நடைப் பருவம் எய்தி வளர்ந்து வருகின்றாள் பூம்பாவை.

"தளரு மின்னின் அங் குரமெனத், தமனியக் கொடியின்
வளரி ளந்தளிர்க் கிளையென, மணிகிள ரொளியின்
அளவில் அஞ்சுடர்க் கொழுந்தென, அணைவுறும் பருவத்
திளவ னப்பிணை யணையவர்க் கேழியாண் டெய்த."

என, படிப்படியாக வளர்ந்து ஏழாண்டுப் பருவமெய்தியதை உவமைகளால் காட்டுகின்றார் ஆசிரியர். ஒசிந்து வளர்கின்ற மின்னற்கொடியின் சிறுமுளைபோலவும், பொற்கொடியிலிருந்து வளர்ந்து வருகின்ற இளம் தளிர்களையுடைய கொடி போலவும், இரத்தின மணிகளினின்றும் வீசுகின்ற அளவில்லாத அழகிய சுடர்க் கொழுந்து போலவும், பருவமுதிர்ச்சி முறையாகப் பொருந்த அழகொளிவிசவளர்ந்து. இளமையான பெண் அன்னம்போல நடைபயின்று ஏழாண்டு நிறைவுற்ற பேதைப் பருவத்தினளாய்த் திகழ்ந்தாள் பேதையார் பலருடன் கூடிக் கழலும் அம்மானையும், சிற்றிலும், ஊசலும் ஆகிய விளையாட்டுக்கள் விளையாடி வளர்ந்து வந்தாள். இத்தகைமையைக் கண்ட சிவநேசர் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டார் அம்மகிழ்ச்சியின் மிகுதியால், "தம்மகளை மணஞ் செய்யும் மணமகனே, தமது முடிவில்லாத அரிய செல்வங்களுக்கெல்லாம் உரிமையுடையவனுவான்" எனத் தம் சுற்றத்தார் பலருமறியக் கூறினுர். அதனைக் கேட்டதும் மகனைப் பெற்ற வணிகர் ஒவ்வொருவருமே, அம்மகளைத் தமக்கு மருமகளாகப் பெற விழைந்திருப்பாரன்றோ?

இவ்வாறு சிவநேசர் மனைவாழ்விலே மகிழ்ந்து வந்தாராயினும், தாம் உள்ளத்தால் வழிபட்டு வருகின்ற ஞானசம்பந்தப பெருமான், அருள்திறத்தால் ஆற்றி வருகின்ற திருத்தொண்டின் திறங்களிலே ஈடுபட்டு மகிழ மறந்தாரல்லர். சிவபெருமான் திருவருளால் ஞானசம்பந்தப் பெருமான் முத்துச் சிவிகையும் முத்துப்பந்தரும் பெற்ற அற்புதத்தைக் கேட்டு அகங்களித்தார்; திருவாவடுதுறையில் உலவாப் பொற்கிழிபெற்ற உயர்வை எண்ணி உள்ளம் உவந்தார்; திருமருகலிலே விடம் தீண்டப்பெற்று இறந்த வணிகனை உயிர்பெற்றெழச் செய்த சிறப்பினைக் கேட்டுச் சித்தம் களித்தார். சிவநேசரது மகிழ்ச்சிக் கெல்லாம் மகுடம் சூட்டுவது போலும் சில செய்திகள் அவரது செவிகளில் எட்டின. 'ஞான சம்பந்தப் பெருமான் பாண்டிய நாடடைந்து சமணரை வாதில் வென்றதும், பாண்டியன் வெப்பு நோயை நீக்கியதும், அதனுல் எதிர்த்த சமணரை, நெருப்பிலே சைவத் திருப்பாட்டு எரியாது நின்ற அற்புதத்தைக் காட்டி அஞ்சச் செய்ததும், வைகை நீரிலே 'வாழ்க அந்தணர்' திருப்பதிகம் எதிரேற

விட்டுச் சமணரைக் கழுவேறவிட்ட பெருமையையும், கூன் பாண்டியனுக்கு நீறளித்து உடற் கூனும், உள்ளக் கூனும் நீக்கி சிவநெறி கொடுத்து நெடுமாறனுக்கிய நீர்மையையும், பாண்டிய நாடு முழுதும் சிவநெறி கமழச் செய்ததுமாகிய செய்திகளைச் சிலர் கூறக் கேட்டார். இன்பக் கடலில் மூழ்கினார்; சொன்னவர்க்கெல்லாம் தூசுடன் காசுமளித்தார். சீகாழிப்பெருமானை, திசைநோக்கிச் சென்னிமேல் கரம் குவித்து விழுந்தெழுந்து வணங்கினார். அம்மகிழ்ச்சிப் பெருக்கிலே தம்மை மறந்தாராய்த் தம் சுற்றத்தினரை யெல்லாமழைத்து,

"சுற்றம் நீடிய கிளைபெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
'கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெடுத்த பூம்பா வையும் பிறங்கிய நிதியும்
மூற்றும் என்னையும் கொடுத்தனன் யானெ'ன்று மொழிந்தார்."

சிவநேசர் அழைத்த சுற்றத்தாருள் பூம்பாவையாரை மணம் கொள்ள உரிமையுடையவரும், சிவநேசர்க்கு ஆண்மகவின் மையால் அவரது செல்வத்திற்குரிய தாயத்தாராகிய கிளைஞரும் இருந்திருப்பர். 'இப்பெண்ணை மணப்பவரே எனது நிதிக்குரியார்' என்று சிவநேசர் முன்னே கூறி யிருந்தார். ஆகவே பெண்ணோடு பெருநிதியத்தையும் பெற விழைந்தார் பலர் அக்கூட்டத்தில் இருத்தல் கூடும். அத் தகையவரையெல்லாம் நோக்கிச் சிவநேசர், "சீகாழிப் பெருமானுக்கு அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையையும், விளக்கமுடைய எனது நிதிகளையும், முழுதும் அடிமையாக என்னையும் கொடுத்தேன்" என்றார். 'முழுதும் அடிமையாக என்னையும்' என்றதால், சம்பந்தருக்கு அடிமையாகிய தாம், மேல்தேடும் பொருளும் 'சம்பந்தருக்கே உரியது' என்றதாயிற்று. அவ்வாறு சம்பந்தப் பெருமானுக்கு முற்றும் ஒப்பு வித்தமையால் பெருமகிழ்வுடன் வாழந்து வந்தார் சிவநேசர்.

பூம்பாவையார் கன்னிமாடத்தில் சேடியருடன் தங்கி வரலானாள். மலர்ப்பொய்கையில் நீராடியும், சோலையில் தழையும் மலரும் கொய்தும், அம்மானையும் கழங்குமாடியும் மகிழ்ந்துவரலானாள் ஒருநாள் மலர் கொய்வதற்காக வழக்கம்

போல் சேடியருடன் சோலை சென்றாள். மலர் கொய்து கொண்டிருந்த பொழுது நாகமொன்று மறைந்து வந்து விரலில் தீண்டி விடவே, பூம்பாவை, மென்மையான பூமாலை தீயிடைப்பட்டதுபோல மயங்கித் தரையில் வீழ்ந்தாள். சேடியர் அலறித்துடித்தனர். சிவநேசரும் சுற்றத்தாரும் விரைந்து வந்து துயர் பெருகக் கலங்கினர்; அழுதனர்; விடம் தீர்ப்பாரை அழைத்தனர். மருந்தாலும் மந்திரத்தாலும் விடம் நீங்காதொழியவே, பாவைமேல் விழுந்தழுதனர் யாவரும். சிவநேசர் விடம் நீக்கும் வழியை நாடலானார். "இவ விடம் நீக்குபவர்க்கு அளவில்லாத என் செல்வம் முற்றும் கொடுப்பேன்" என்றார். இச்செய்தி நாடுமுழுதும் பறையறைந்து தெரிவிக்கப்பட்டது. செய்தியறிந்த அரச சமூக வல்லவர் முதலாகப் பலரும் வந்து மந்திரம், தியானம், பாவகம், முட்டிநிலை இவற்றால் தொடர்ந்து முயன்றும் பயனளிக்காமை கண்டு கைவிட்டகன்றனர். சிவநேசர் மிக மயங்கினார். ஞானசம்பந்தரின் உடைமை எனக்கருதிய பூம்பாவைக்கு உடைவு ஏற்பட்டதே என வருந்தினார். பூம்பாவை என்றும் சம்பந்தப்பெருமானுக்கே எனக் கருதினார். அந்நிலையில் அவர்க்கோர் தெளிவு ஏற்பட்டது. "உடைய பிள்ளையார்க்கென இவள் தனை உரைத்ததனால் அடைவு துன்புறுவதற்கு இலையாம் நமக்கு" என்று எண்ணித் துன்பம் நீங்கினார். பூம்பாவையின் இறந்த உடம்பைத் தீயில் அடக்கி எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் வைத்து, பூந்துகிலும் அணிகளும் அணிந்து, கன்னிமாடத்தில் காவலோடு வைத்தார். மாலை, சந்தனம், போனகம், விளக்கீடு இவ்வாறாக உயிருடையார்க்குச் செய்வதுபோல் நாள்தோறும் செய்து வந்தார். ஞானசம்பந்தப் பெருமான் தம்மிடம் வருமளவும் அவ்வாறு பாதுகாப்பது எனத் துணிந்தார். இவரது செய்கையைக் கண்ட சுற்றத்தார் வியப்பெய்தினர்.

(தொடரும்)

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் பெரிய புராண விரிவுரைத் தொடரில் 12-4-70ல் "எறிபத்தரும் ஏனாதி நாதரும்" 26-4-70ல் "கண்ணப்ப நாயனர்" 30-4-70ல் "நாவரசர் நற்றமிழ்" 10-5-70, 31-5-70ல் "கலயரும் கஞ்சாறரும்" என்னும் தலைப்புக்கள் பற்றி, திருநகர் திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப் பெற்றன. 23-5-70ல் சைவப் பெருநாவலர் திரு. அ. நடேசமுதலியார் அவர்கள் "திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும்" என்னும் தலைப்பில் ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினர்.

திருமழபாடித் திருக்கோயிலில் 30-4-70ல் அப்பர் விழா இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. குடந்தை ப. சுந்தரேசன் அவர்கள் முயற்சியால் போற்றித் திருத்தாண்டக அர்ச்சனையும் தேவார இசையும் நிகழ்ந்தன. மேலும் திருப்பூந்துருத்தியிலும் அப்பர் திருமடத்தில் சதய விழா வார வழிபாட்டுக் கழகத்தினரால் மிகச் சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரும் சோமநாதர் கோவிலில் அப்பர்விழாக் கொண்டாடினர்.

காஞ்சி மெய்கண்டார் கழகச் சார்பில் 18-5-70ல் மாதவச் சிவஞான சுவாமிகள் விழாவும் 15-5-70 ல் வைகாசி வெள்ளி வழிபாடும் 19-5-70ல் மெய்கண்டதேவ நாயனர் வைகாசிச் சுவாதித் திருநாளும் 23-5-70ல் சம்பந்தர் திருவிழாவும் 7-6-70ல் நம்பியாண்டார் நம்பிகள் திருநாளும் 8-6-70ல் சேக்கிழார் விழாவும் கச்சபேசர் கோவில், காமாட்சி திருக்கோயில், திருவேகம்பம் முதலிய திருக்கோயிலகளில் முறையே கொண்டாடப் பெற்றன. திரு. வி. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் முன்னின்று இவற்றைச் சிறப்புற நடத்தினர்.

ஸ்ரீமத் பாம்பன் குமாரகுருதாச சுவாமிகள் 41-ஆம் ஆண்டு குருபூசை விழா 26-5-70, 27-5-70-ஆம் நாட்களில் திருவான்மியூர் மயூரபுரத்தில் ஸ்ரீமத் சுவாமிகள் திருக்

கோயிலில்மிகச் சிறப்புற நிகழ்ந்தது திருமுருக. கிருபானந்த வாரியார் முதலிய பெருமக்கள் பலர் கலந்து சொற்பெருக் காற்றினர்.

குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள் பெருந்திருவிழா 29-5-70 முதல் 9-6-70 முடிய சிறப்புற நிகழ்ந்தது. அவ் வமயம் குன்றத்தூர் சேக்கிழார் கழக இருபத் தொன்பதாம் ஆண்டு விழாவும் 30-5-70 முதல் 8-6-70 முடிய சிறப்புற நிகழ்ந்தது. இந்நாட்களில் தினந்தோறும் காலை பெரிய புராண வகுப்பும் மாலை பெரியபுராணச் சொற்பொழிவுகளும் சிறப்புற நிகழ்ந்தன. பல சைவப்பெருமக்கள் சொற்பொழி வாற்றினர்.

சங்கரன் கோயில் சைவ சித்தாந்த சபையின் 18-ஆம் ஆண்டு விழா 5-6-70, 6-6-70, 7-6-70-ஆம் நாள்களில் மாதாங்கோவில் தெரு ஸ்ரீ சித்திவிநாயகர் திருச்சந்நிதியில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. காசிநாததுரை, ஆ. ஈசுரமூர்த் திப் பிள்ளை, R. அர்ஜுனன் முதலிய பெருமக்கள் பலர் கலந்து சொற்பொழிவுகளாற்றியுள்ளனர். சைவ மாணவர் அரங்கு மிகக் கவர்ச்சிகரமாயுள்ளது. மாணவர்களை இம் முறையில் சமயப்பற்றுக்கு ஊக்குவது வரவேற்கத்தக்கது.

நம் சமாஜப் பேரன்பர் திரு. C. வள்ளிநாயகம் பிள்ளை, B. A., B. L. அவர்கள் அருமைத் திருமகனார் V. சங்கரன் பிள்ளை அவர்களுக்கும் திருவனந்தபுரம் கரமனை அ. கோலப்ப பிள்ளை அவர்கள் திருமகளார் திருமதி. அழகு பார்வதி அம்மையாருக்கும் திருமணம் கரமனையில் 18-5..70 அன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

மணமக்களிருவரும் எல்லா நற்செல்வங்களும் இனிது பெற்று இந்நிலவுலகத்தில் நீடுவாழ திருச்செந்திலாதிபன் திரு வருள் பாலிக்க அவனருளையே துணையாக் கொண்டு வாழ்த்துகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.